STC No. 439/2021 Date : 04-06-2025

P.W.2- ராமமூர்த்தி

(புகார்தாரர், எதிரி ஆஜர். )

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

(1) புகார்தாரரின் தந்தை கந்தசாமி ஆடிட்டர் என்பவருக்கும் எனக்கும்தான் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக கொடுத்ததாக கூறப்படும் தொகைக்கு முன்பாக அல்லது பின்பாக எத்தனை முறை எங்களுக்குள் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால் சுமார் 5, 6 முறை இருந்தது. எந்தெந்த தேதிகளில் மேற்சொன்னவாறு கொடுக்கல் வாங்கல் இருந்தது என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியுமா என்றால் இயலாது. இந்த வழக்கிற்கு நான் சாட்சியம் அளிக்க எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் எந்த தேதியில் பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பாக குறிக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள தேதியை ஞாபகத்திற்காக எழுதி வைத்துள்ளதை பார்வையிட்டு தேதி பற்றி சாட்சியம் அளித்தேனா என்றால் இதற்கு முன்பு சிறுக சிறுக பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது. இம்முறை அதிகமான தொகை கொடுத்ததால் தேதி ஞாபகத்தில் இருந்தது. அதை வைத்துக் கூறினேன்.

(2) என்னிடம் எவ்வளவு நாட்களுக்கு முன்பாக பணம் கேட்டார்கள் என்றால் இரண்டு நாட்களுக்கு முன்பாக கேட்டார்கள். எத்தனைபேருக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் பிறருக்கு வட்டிக்கு பணம் கொடுத்ததில்லை. பழக்கத்தினால் உறரிஉறரகுமார் என்பவருக்கு பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டம் கொரோனா தொற்று பாதிப்பில் இருந்து ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டம் என்றால் சரிதான். நான் கொடுத்ததாக கூறப்படும் ரூ.3 இலட்சம் தொகையினை எவ்வாறு ஏற்பாடு செய்து கொடுத்தேன் என எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தொழிலுக்காக வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தாஸ் கலர் மேட்ச்சஸ் (தீக்குச்சி மத்தாப்பு) தொழில் செய்து வருகிறேன். தொழில் சம்மந்தமான வரவு செலவுகளை தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான், கந்தசாமி ஆடிட்டரிடம் தாக்கல் செய்கிறேன்.

(3) நான் தாக்கல் செய்த வரவு செலவுகளைப் பார்த்தால் நான் கந்தசாமி ஆடிட்டரிடம் கொடுத்ததாக கூறப்படும் ரூ.3 இலட்சம் பற்றிய விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என்னுடைய தொழில் தேவைக்காக எத்தனை இலட்சம் ரூபாய் வரை நகைகளை வங்கியில் அடமானம் வைத்து பெறுவேன் என்றால் ரூ.1 இலட்சம் தேவைப்படும்போது நகைகளை வங்கியில் அடமானம் வைத்து பெறுவேன். நான் சொன்ன தேதியில் கந்தசாமி ஆடிட்டரிடம் பணம் கொடுத்ததாக கூறப்படுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. கந்தசாமி ஆடிட்டர் எனக்கு பலவருடங்களாக கணக்கு பார்த்து வருவதால் அவர் சொன்னதன் பேரில் அவரது மகனுக்கு நான் பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.3 இலட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.